திரு. வி. எஸ். எஸ். மணி : பஞ்சாயத்து யூனியன் நிதிகளை கிராம பஞ்சாயத்துக்கள் அனுபவிக்கக்கூடிய அளவில் டவுன் பஞ்சாயத்துக்கள் அனுகூலம் அடைவதில்லை. எனவே டவுன் பஞ்சாயத்துக்கள் தனியாக இயங்கும்படி நிதிகளை அலாட்மெண்டு செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : லோகல் செஸ்ஸிலேகூட 9-ல் 2 பங்கு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தது போக, பஞ்சாயத்து யூனியன் எலிமெண்டரி எஜுகேஷன் பண்டுக்கு 9-ல் 4 பங்கு கொடுத்துவிட்டு, மீதித் தொகையை வில்லேஜ் வாரியாகக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

Road (Pudur-Nallur).

* 255 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to form a road from Pudur to Nallur, via A. Mallapuram and Sukkampatty in Dharmapuri taluk, Salem district?

THE HON. SRI S. M. A. MAJID : Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த வேலை மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மாரந்தஹள்ளி டவுன் பஞ்சாயத்தின் கீழ் ஒரு மைல் 5 பர்லாங்கு. கிட்டத்தட்ட 1964-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் முடிவு பெறலாம். அம்மணிமல்லபுரம் பஞ்சாயத்துக்குக் கீழே 2 மைல் 1 பர்லாங் ரோடுக்கு ரூ. 9,300-க்கு எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. அது சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 1,688 எற்கனவே செலவாகிவிட்டது. சீக்கிரம் அந்த வேலை முடியும். பேலமர்ணஹள்ளி பஞ்சாயத்தின் கீழ் 2 மைல் 5 பர்லாங் ரோடுக்கு இதுவரைக்கும் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்படவில்லை. கிராமத் தொண்டர் படையினரை உபயோகித்து, அந்த வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று அந்தப் பஞ்சாயத்து கருதுவதாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டக் காடுகள்.

* 264 கேள்வி—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள காட்டிலாக்காவின் காடுகளிலிருந்து அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருவாய் எவ்வளவு ?

19th November 1963]

(இ) சென்ற ஆண்டு எத்தனை புதிய மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) தஞ்சாவூர் மாவட்டக் காடுகளில் விறகு மரத்தோப்புகள், காடு படு சிறு பொருள்கள் ஆகியவற்றின் விற்பனை மூலம் 1962-63-ல் ரூ. 42,571 கிடைத்தது.

(இ) "ஆறு, கால்வாய், ஏரிக்கரை நெடுக மரம் வளர்த்தல்" திட்டத்தின்கீழ் இந்த மாவட்டத்தில் 1962-63-ல் 693 ஏக்கர்களில் தேக்கும், 21 ஏக்கர்களில் மூங்கிலும், 30 ஏக்கர்களில் கலப்பு யூகலிப்டஸ் மரங்களும் நடப்பட்டன. இவை தவிர, 72 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பில் சவுக்கும் 100 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பில் முந்திரியும் பயிரிடப்பட்டன.

திரு. ர. ஜீவரத்னம் : வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து காட்டிலாகாவிற்கு வருஷ வருமானம் எவ்வளவு கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் காட்டிலாகாவைச் சேர்ந்த பகுதிகளில், காடுகள் வளர்க்கப்படாத சாகுபடிக்குத் தகுதியுள்ள இடங்களில் கூட்டுறவு சங்க அடிப்படையில் சாகுபடி செய்வதற்கு மனுக்கோரினால், அது கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : காட்டு இலாகாவிற்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் மரங்கள் வைத்துப் பயிரிடும் திட்டம் தான் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

திரு. அ. கு. சுப்பையா : காடுகள் எல்லாம் தனி நபர்களுக்கு ஏலம் விட்டு விற்பனை செய்யப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கே காடுகளை ஏலம் விட்டால், அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்துக் கொண்டு. அதிலிருந்து வேலைகளில் ஈடுபட முடியும். தனி நபர்களுக்கு விற்பனை செய்வதை விட்டு விட்டு. பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கமுடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : விறகு உண்டாக்கினதற்குப் பிறகு, தனி நபரிடத்தில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்களா ? பஞ்சாயத்து யூனியன்களுக்கோ அல்லது பஞ்சாயத்து போர்டுகளுக்கோ சொந்தமான புறம்போக்கு நிலங்களை அவர்கள் சம்மதத்தின் பேரில் காட்டிலாகாவிற்குக் கொடுத்தால், மரம் நட்டுக் கொடுக்க முடியும்.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் பதிலில் பெரிய பரப்பளவில் மரங்கள் நடப்பட்டதாகச் சொன்னார்கள். இப்படி மரங்களை வைத்து விட்டு, தண்ணீர் வசதி இல்லாத காரணத்

தால், வைத்த மரங்கள் பட்டுப் போகின்றன. அவற்றிற்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : காடுகளில் எல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதென்றால், அதிகமாகச் செலவாகும். இன்றைய தினம் செலவு அவ்வளவு இல்லை. மழை காலத்தில் கன்றுகளை நட்டு வைக்கிறோம். மழை இல்லாமல் போய்விட்டால், 100-க்கு 40 அல்லது 50 பட்டுப்போய் விடுகிறது.

திரு. கோ. சி. மணி : புதிதாக பயிராக்கப்பட்ட மரங்கள் என்ற இனத்தில், ஆலங்கிளைகள் வைத்துப் பயிராக்கப்படுகிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : ஹைவேஸிலுள்ள ரஸ்தாக்களில் தான் அவைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காட்டிலாக்காவினர் வைக்கவில்லை.

திரு. ர. ஜீவரத்னம் : வட ஆற்காட்டில் ஜவ்வாது மலைப்பகுதி போன்ற இடங்களில் தேக்கு, வேங்கை முதலிய மரங்கள் வைத்துப் பயிரிட முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : வட ஆற்காடு ஜில்லா என்பது மட்டுமல்ல. எல்லா ஜில்லாக்களிலுமே மரங்களை வைத்துப் பயிரிடுவதுதான் திட்டம்.

இயங்கும் பதிவு அலுவலகங்கள்

* 265 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பத்திரப் பதிவு அலுவலகங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக கிராமங்கள்தோறும் சென்று பத்திரம் பதிவு செய்ய Mobile Sub-Registrar- களை நியமிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு, பத்திரங்கள் பதிவு செய்ய, மொபைல் சப் ரிஜிஸ்தார்களை நியமிப்பது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. பாதுகாப்பு இல்லை. பண விரயம் அதிகமாகும். இன்னும் சில சங்கடங்கள் இருப்பதனால், மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் தொண்டர் படை இருக்கிறது. தொண்டர் படையைப் பாதுகாப்பாக வைத்துச் செய்ய முடியாதா ?